நிருபர்கள் தேவை
தமிழகமெங்கும் தினசரி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் தேவை. நிருபராக முன் அனுபவம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் : 9080728304
மின்னஞ்சல்: dhinatamil.tn@gmail.com

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936
www.dhinatamil.com · மாற்றத்தின் ஆரம்பம் · dhinatamil

.நாகர்கோவில் பதிப்பு.25.02.2026 . மலர் 04 . இதழ் 55.புதன்கிழமை . NAGERCOIL EDITION .25.02.2026 . VOL 04 . ISSUE 55. WEDNESDAY . 4 PAGES . Rs. 5

உங்கள் அபிமான தின தமிழ் செய்திகளை Whatsapp - ல் பின் தொடர

## பாஜகவை

# ஒரு கை பார்க்க தயார்

## முதல்வர் ஸ்டாலின் திட்டவட்டம்



சென்னை: பிப்.25–

"தமிழகத்தில் பல முனை போட்டிகள் இருக்கலாம். ஆனால், அது பலம் பொருந்திய போட்டியாக இல்லை," என முதல்வர் ஸ்டாலின் கூறினார்.

சென்னையில் நடந்த தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சியில், முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது: தமிழகத்தை தவிர வேறு எந்த மாநிலமும், 11.19 சதவீதம் என்ற வளர்ச்சியை சாதிக்க முடிய வில்லை. ஜனநாயகத்திற்கும், கூட்டாட்சிக்கும் சிறிதும் மதிப்பு தராத பா.ஜ., அரசு மத்தியில் உள்ளது.

எதிர்க்கட்சிகள் ஆளக்கூடிய மாநிலங்களை, எந்த அளவிற்கு வஞ்சகத்துடன், ஓரவஞ் சனையுடன் அவர்கள் அணுகுகின்றனர் என்று, நான் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. நாங்கள் செய்திருப்பது போன்ற திட்டங்களை, வேறு எந்த மாநிலத்திலாவது செய்து இருக்கின்றனரா?

தமிழகத்தில் எந்த குடும்பத்தை எடுத்துக் கொண்டாலும், அவர்களில் ஒருவராவது தி.மு.க., அரசின் திட்டங்களால் பயனடைந்து கொண்டிருப்பார். அதனால் தான், ஆட்சிக்கு ஆதரவான மனநிலையில் மக்கள் உள்ளனர்.

தமிழகத்தின் இந்த வளர்ச்சியும், தனித்துவமும், உண்மையான வளர்ச்சி அரசியல் என்றால் என்ன என்று, இந்தியாவின் மற்ற மாநிலங்களுக்கு காண்பிக்கும் செயல்பாடுகளும், பா.ஜ.,வை கடுமையாக எரிச்சல் அடைய வைக்கிறது.

அவர்களின் சதி அரசியல் வெளிப்பட்டு, அவமானப்பட்டு அசிங்கப்பட்டு நிற்கின்றனர். மற்ற மாநிலங்களில் கட்சிகளை மிரட்டி ஆட்சிகளை கவிழ்த்து, தங்களின் அரசை கொண்டு வர பயன்படுத்திய வாஷிங் மெஷினை, பா.ஜ.,வினர் இங்கும் கொண்டு வந்து, கூட்டணி அமைத்து உள்ளனர்.

தேசிய ஜனநாயக கூட்டணி என்பது, முழுக்க முழுக்க ஊழல்வாதிகளை மிரட்டி அமைக்கப்பட்டுள்ள கூட்டணி. அ.தி.மு.க., ஆட்சியில் இருந்த முன்னாள் அமைச்சர்கள் பலர், 'ரெய்டு'களுக்கு ஆளாகினர். கூட்டணிக்காக அவர்களை இப்போது பாதுகாத்து கொண்டிருக்கின்றனர்.

இன்னும் சொல்ல வேண்டும் என்றால், முன்னாள் அமைச்சர்கள் மீது எப்.ஐ.ஆர்., கூட பதிவு செய்ய விடாமல், கவர்னர் வாயிலாக நீண்ட காலமாக நிறுத்தி வைத்து உள்ளனர். இந்த லட்சணத்தில் அமலாக்கத் துறை, வருமான வரித் துறை, சி.பி.ஐ., வாயிலாக எங்களை மிரட்டலாமா என்று பார்க்கின்றனர்.

பா.ஜ., தன் படை பரிவாரத்தை அழைத்து வந்தாலும், அதை ஒரு கை பார்க்க நாங்களும் தயாராகத் தான் இருக்கிறோம். மக்கள் பா.ஜ.,வை நம்ப வேண்டும் என்பதற்காக, பழனிசாமி போன்றவர்களை கிளை செயலர்களாக வைத்துக்கொண்டு உள்ளே வர நினைக்கின்றனர்.

தமிழகத்தில் நடக்க இருப்பது ஜனநாயகத்திற்கும், பாசிசத்திற்கும் இடையிலான தேர்தல். பிரதமர் மோடி, அமித் ஷா ஆகியோர் தமிழகத்திற்கு அடிக்கடி வர வேண்டும். கவர்னரையும் மாற்றக் கூடாது. அதுவே, மக்கள் மத்தியில் எங்களுக்கு பெரிய பலம்.

'இண்டி' கூட்டணி தலைவராக நான் வர வாய்ப்பிருக்கிறதா என்று கேட்கிறீர்கள். என் உயரம் எனக்கு தெரியும். அந்த உயரத்தின் அடிப்படையில் நான் இருப்பேன். இவ்வாறு ஸ்டாலின் பேசினார்.

# சூடாகும் தேர்தல் களம்... சுத்துப் போடத் தயாராகும் பாஜக



சென்னை, பிப்.25-

வாரிசுகளுக்கு வாய்ப்புக் கேட்டு வரிசை கட்டி நிற்கும் தலைவர்கள், தமது ஆதரவாளர்களுக்காக இப்போதே தொகுதிக்கு 'துண்டு' போட்டு வைக்கும் மூத்த முன்னோடிகள், கூடுதல் இடங்களைக் கேட்டு குடைச்சல் கொடுக்கும் கூட்டணித் தோழமைகள் என அண்ணா அறிவாலயத்தில் பறக்கும் அனலுக்கு மத்தியில் பாஜகவும் தன் பங்கிற்கு திமுகவுக்கு எதிரான விவகாரங்களை தூசு தட்டி எடுத்து குடைச்சல் கொடுக்கத் தயாராகி வருகிறது.

கடந்த 2011 சட்டப்பேரவைத் தேர்தலில் கொளத்தூர் தொகுதியில் தற்போதைய முதல்வர் மு.க.ஸ்டாலினும், அதிமுகவின் சைதை துரைசாமியும் மோதினர். சொற்ப வாக்குகள் வித்தியாசத்தில் ஸ்டாலின் வெற்றி பெற்றார். இதை எதிர்த்து சைதை துரைசாமி உயர் நீதிமன்றத்தில் தேர்தல் வழக்கு தொடர்ந்தார். ஆனால், "ஸ்டாலினுக்கு எதிரான புகார்கள் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை" எனக் கூறி வழக்கை தள்ளுபடி செய்தது உயர் நீதிமன்றம். இதை எதிர்த்து சைதை துரைசாமி உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார்.

ஆண்டுக் கணக்கில் நிலுவையில் இருந்த இந்த வழக்கின் இறுதிக்கட்ட விசாரணை அண்மையில் முடிக்கப்பட்டு தேதி குறிப்பிடாமல் தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. உச்ச நீதிமன்றமும் ஸ்டாலினுக்கு நிம்மதி தரும் விதமாகவே மனுதாரர் தரப்பை கேள்வி எழுப்பி இருந்தாலும், தேர்தல் நேரத்தில் இந்த வழக்கின் தீர்ப்பு எப்படிப் போகுமோ என்ற கவலை அறிவாலயத்தை வதைத்துக் கொண்டிருக்கிறது. ஸ்டாலினுக்கு எதிரான வழக்கு என்பதால் பாஜக மேலிடமும் இதை உன்னிப்பாக கவனித்து வருகிறது.

இதேபோல், அமைச்சர் கே.என்.நேருவைச் சுற்றியும் சர்ச்சைகள் வட்டமடிக்கின்றன. நகராட்சி நிர்வாகத்தில் பணியிடங்களை நிரப்புவதில் நேரு தரப்பில் லஞ்சம் பெறப்பட்டதாக கடந்த 2025ல்அமலாக்கத் துறை தமிழக டிஜிபிக்குக் கடிதம் அனுப்பியது. அதன் அடிப்படையில், நேரு மற்றும் அவரது சகோதரர் மீது வழக்குப் பதிவு செய்யக் கோரி அதிமுக வழக்கறிஞர் அணி செயலாளர் இன்பதுரை வழக்குத் தொடர்ந்தார்.

இதைவிசாரித்த நீதிமன்றம், "அமலாக்கத்துறை வழங்கிய ஆதாரங்களில் முகாந்திரம் உள்ளதால், தாமதமின்றி லஞ்ச ஒழிப்புத் துறை வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்த வேண்டும்" என உத்தரவிட்டது. வழக்குப் பதிவானால் கொஞ்சமும் தாமதிக்காமல் மத்திய அரசின் அமலாக்கத்துறை தங்களைத் தேடி புறப்பட்டு வந்துவிடும் என்பதால் நேரு முகாமும் இப்போது உச்சகட்ட உதறலில் இருக்கிறது.

இந்த நெருக்கடிகள் குறித்து மதுரையில் பேசிய முதல்வர் ஸ்டாலின், "நாங்கள் பார்க்காத மிசாவா,தடாவா? ஆட்சி, பதவி ஏன், உயிரே போனாலும் கவலைப்பட மாட்டோம். எதிர்க்கட்சிகளிலேயே திமுக வினர் மீதுதான் அதிகமான ரெய்டுகள் நடக்கின்றன. சிபிஐ, இடி, ஐடி என எந்தச் சித்து விளையாட்டுக்கும் நாங்கள் அஞ்ச மாட்டோம்" என ஆவேசமாக முழங்கினார்.

இதுகுறித்து நம்மிடம் பேசிய திமுக செய்தித் தொடர்பாளர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், "மக்கள் மத்தியில் திமுக வுக்கு எதிரான எதிர்ப்பு அலை இல்லை. எனவே,செயற்கையான காரணங்களை உருவாக்கி பாஜக அரசியல் ஆதாயம் தேட முயல்கிறது. மக்கள் அனைத்தையும் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள்" என்றார்.

பாஜக செய்தித் தொடர்பாளர் நாராயணன் திருப்பதியோ, "எல்லாவற்றிற்கும் பாஜகதான் காரணம் எனச் சொல்வது தவறு. நீதிமன்றத்தில் வழக்குகள் முகாந்திரம் இருந்தால் தான் விசாரிக்கப்படுகின்றன. திமுக வினரின் இத்தகைய பேச்சுகள் பாஜக மீதுஅவர்களுக்கு இருக்கும் பயத்தையே காட்டுகிறது" என்கிறார்.

யார் என்ன சொன்னாலும், "திமுகவை ஒழிக்க வேண்டும்" எனப் பேசி வரும் பாஜக தலைவர்கள், இந்தத் தேர்தலில் அந்தக் கட்சியை அத்தனை எளிதில் ஜொலிக்கவிட்டுவிட மாட்டார்கள் என்பதற்கான அறிகுறிகள் ஆங்காங்கே தென்பட ஆரம்பித்துவிட்டன.

# "எப்ஸ்டீன் கோப்புகள், அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம் தான் நாட்டுக்கு அவமானம்" மோடிக்கு ராகுல் பதில்



புது டெல்லி, பிப்.25-

காங்கிரஸ் கட்சி அசிங்கமான அரசியலில் ஈடுபடுவதாக பிரதமர் மோடி குற்றம்சாட்டிய நிலையில், எப்ஸ்டீன் கோப்புகளில் பிரதமரின் பெயர் இடம்பெற்றுள்ளது மற்றும் அமெரிக்க வர்த்தக ஒப்பந்தத்தின் கீழ் இந்தியாவின் நலன்களை மத்திய அரசு விற்றது ஆகியவை தான் நாட்டின் அவமானம் என்று மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி குற்றம் சாட்டியுள்ளார்.

இதுபற்றி ராகுல் காந்தி வெளியிட்ட எக்ஸ் பதிவில், "மோடிஜி, நீங்கள் அவமானத்தைப் பற்றிப் பேசுகிறீர்களா?. அவமானம் என்றால் என்ன என்பதை நான் உங்களுக்குச் சொல்கிறேன். எப்ஸ்டீன் கோப்புகளில் உங்கள் பெயர், உங்கள் அமைச்சர் மற்றும் உங்கள் நண்பரின் பெயர்கள் இடம் பெற்றுள்ளன. உங்கள் பெயர்கள் ஒரு மோசமான குற்றவாளியுடன் இணைக்கப்பட்டுள்ளது. இதுதான் அவமானகரமான விஷயம். நீங்கள் அமெரிக்காவுடன் செய்து கொண்ட வர்த்தக ஒப்பந்தம், அதில் நீங்கள் நாட்டையே விற்றுவிட்டீர்கள், இது வெட்கக்கேடானது.

அமெரிக்காவிடம் நீங்கள் நாட்டின் தரவுகளை ஒப்படைத்துவிட்டீர்கள். நீங்கள் விவசாயிகளை அழித்துவிட்டீர்கள். நீங்கள் ஜவுளித் தொழிலை அழித்துவிட்டீர்கள். இது வெட்கக்கேடானது. அமெரிக்காவில் அதானிக்கு எதிராக நடந்து வரும் வழக்கு உங்களை தூங்கவிடாமல் செய்தது என்பது முழு நாடும் அறிந்ததே. ஏனென்றால் அது பாஜக மற்றும் உங்கள் நிதிக் கட்டமைப்பிற்கு எதிரான வழக்கு. 14 மாதங்களாக, அதன் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை, அது வெட்கக்கேடானது" என்று தனது பதிவில் குறிப்பிட்டார்.

மேலும் அவர், "மோடிஜி, உங்கள் நண்பர்கள் அனில் அம்பானி, அதானி மற்றும் உங்களுக்கு எது பொருத்தமானதோ அதைச் செய்யுங்கள். நானும் காங்கிரஸின் சிங்க இதயம் கொண்ட வீரர்களும் நாட்டைப் பாதுகாப்போம். நாங்கள் ஒரு அங்குலம் கூட பின்வாங்க மாட்டோம். பிரதமரின் கண்களில் பயம் இருக்கிறது. அதனால்தான் பட்ஜெட் கூட்டத்தொடரின் போது நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியை அவர் எதிர்கொள்ளவில்லை" என்று கூறினார்.

மோடியின் விமர்சனம்: உத்தரப் பிரதேச மாநிலம் மீரட் நகரில் நேற்று நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பங்கேற்ற பிரதமர் நரேந்திர மோடி, டெல்லி ஏஐ உச்சி மாநாட்டில் ஆடையை களைந்து காங்கிரஸ் கட்சியினர் நடத்திய போராட்டத்தை கடுமையாக விமர்சித்தார். "இந்தியாவில் நடைபெற்ற சர்வதேச நிகழ்வை, கண்ணியமற்ற அரசியலை அரங்கேற்றும் அரங்கமாக காங்கிரஸ் கட்சி பயன்படுத்தியது. வெளிநாடுகளை சேர்ந்த பிரதிநிதிகள் முன்பாக ஆடையை காங்கிரஸ் கட்சியினர் களைந்து நின்றனர்.

நீங்கள் அப்படித்தான் என்று நாட்டு மக்கள் அறிவார்கள். அப்படி இருக்கும்போது ஏன் உங்களது ஆடையைக் களைய வேண்டும்? இதை நான் காங்கிரஸ் கட்சியின் தலைவர்களிடம் கேட்க விரும்புகிறேன். இந்தியாவை அவமதித்த காங்கிரஸ் கட்சியை சேர்ந்தவர்களின் இத்தகைய செயலுக்கு அக்கட்சியின் தலைவர்கள் வருத்தம் தெரிவித்திருக்க வேண்டும். ஆனால், அதற்கு நேர்மாறாக உள்ளது நிலைமை. இந்தச் செயலுக்கு பிறகு காங்கிரஸ் கட்சியின் கூட்டணி கட்சியினர் அவர்களை விட்டு சற்று விலகி உள்ளனர்.

நீங்கள் பிரதமர் அரியணையில் அமர வேண்டுமென்றால் மக்களின் நம்பிக்கையை முதலில் பெற வேண்டும். இன்று வளர்ந்த நாடுகள் இந்தியாவுடன் இணைந்து பயணிக்க ஆர்வம் காட்டி வருகின்றன. இந்தியாவின் வளர்ச்சியில் தங்களின் எதிர்காலத்தை அவர்கள் பார்க்கிறார்கள். 21ம் நூற்றாண்டில் எதிர்கொள்ளும் சவாலுக்கு இந்தியா தீர்வு தரும் என உலகம் கருதுகிறது.

முன்னொரு காலத்தில் காங்கிரஸ் ஆட்சியில் வளர்ந்த நாடுகளுடன் ஒப்பந்தம் மேற்கொள்ள விருப்பம் இருந்தும், அது நடக்காத ஒன்றாக இருந்தது. ஆனால், பாஜக ஆட்சியில் தேசத்தின் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது" என தெரிவித்திருந்தார்.

# "அரசியலில் தனிமைப்படுத்தும் வகையில் நான் செய்த தவறு என்ன?" ஓபிஎஸ் ஆவேசம்

போடி, பிப்.25-

"என்னை இந்த அளவுக்கு அரசியலில் தனிமைப்படுத்தும் வகையில், நான் என்ன தவறு செய்து விட்டேன்? அந்த உண்மையைச் சொல்லுங்கள்... நான் அரசியலை விட்டு விலகி விடுகிறேன்" என முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் ஆவேசமாக தெரிவித்துள்ளார்.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் பிறந்தநாளை முன்னிட்டு போடியில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது. இதில் கலந்துகொண்ட ஓபிஎஸ் பின்னர் செய்தியாளர்களிடம் கூறியது: "ஜெயலலிதா இறந்த பிறகு எனக்கு முதல்வராவதில் விருப்பமில்லை. ஆனால், என்னை கட்டாயப்படுத்தி முதல்வர் ஆக்கினார்கள். அதன் பிறகு, என்னை பல்வேறு வகையிலும் அவமானப்படுத்தி முதல்வர் பதவியில் இருந்து வெளியேற்றினார்கள்.

ஒவ்வொரு முறையும் எதிர்க்கட்சியில் இருந்தாலும், ஆளுங்கட்சியிலும் இருந்தாலும் ஆட்சி முடிந்ததும் அனைவருக்கும் வாழ்த்து சொல்வது எனது மரபு. அந்த அடிப்படையிலே திமுக ஆட்சிக்கு வாழ்த்து தெரிவித்தேன். ஆனால் நான் திமுகவுக்கு ஆதரவு தெரிவிப்பதுபோல கருத்து பரவிவிட்டது. டிடிவி தினகரன் என்னை பசுத் தோல் போர்த்தியப் புலி என்று கூறியுள்ளார்.

அரசியல் நாகரிகம், பண்பாடு கருதி நான் கடின வார்த்தைகளை பயன்படுத்துவது இல்லை. நான் நினைத்தால் அவரை விட மோசமான வார்த்தைகளை பயன்படுத்தி கருத்து கூற முடியும். நான் இனி சங்கர மடத்துக்கா செல்ல முடியும்?

என்னை இந்த அளவுக்கு அரசியலில் தனிமைப்படுத்தும் வகையில், நான் என்ன தவறு செய்து விட்டேன்? அந்த உண்மையைச் சொல்லுங்கள்... நான் அரசியலை விட்டு விலகி விடுகிறேன்.

திமுக பலமான கூட்டணியில் உள்ளது. ஆகவே, அவர்களை வெல்ல அதிமுகவினர் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்றுதான் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறேன்.

நான் போடி தொகுதியில் போட்டியிடுகிறேனா என்று ஆண்டவனுக்கு தான் தெரியும். தனிக்கட்சி தொடங்க மாட்டேன். எம்ஜிஆர் ஜெயலலிதா ஆகியோர் அதிமுக கட்சியில் வகித்த சட்ட விதிமுறைகளை மீண்டும் கொண்டு வரும் வரை அதிமுகவுக்கு எதிராக சட்டப் போராட்டம் நடத்திக் கொண்டே இருப்பேன்" என்றார் ஓபிஎஸ்.

# தக்கலை அருகே காதலிக்கு கடிதம் எழுதிவிட்டு தற்கொலை செய்த பட்டதாரி வாலிபர்



தக்கலை, பிப்.25-

தக்கலை அருகே உள்ள துண்டத்து விளை பகுதியை சேர்ந்தவர் ஜெயமுருகன் மகன் விக்னேஷ் (21). எம்பிஏ பட்டதாரியான இவர் கடந்த 3 மாதங்களும் முன்பு வெளிநாட்டிற்கு வேலைக்கு சென்றுள்ளார். அங்கு ஆயில் நிறுவனத்தில் வேலை பார்த்தவர் வேலை பிடிக்காமல் கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு சொந்த ஊருக்கு திரும்பி உள்ளார். விக்னேஷ் கல்லூரியில் படிக்கும் போது அவருடன் படித்த ஒரு பெண்ணை காதலித்து வந்துள்ளார். இந்த காதல் விவரம் அந்த பெண்ணின் பெற்றோருக்கு தெரிய வந்த போது அவர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் வெளிநாட்டில் இருந்து வந்த விக்னேஷ் காதலியை சந்தித்து அவரை திருமணம் செய்வதற்கு சம்மதத்தை கேட்டுள்ளார். அதற்கு அவர் மறுத்துள்ளார். இதனால் மணமுடைந்த விக்னேஷ் விரத்தி அடைந்து வீட்டு மாடியில் உள்ள அறையில் தூக்கிட்டு தற்கொலை செய்துள்ளார்.

உறவினர்கள் கண்டு இதுகுறித்து தந்தை ஜெயமுருகன் தக்கலை போலீசில் புகார் செய்தார். போலீசார் உடலை கைப்பற்றி குமரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் போலீசாரிடம் விக்னேஷ் காதலிக்காக எழுதி வைத்துள்ள ஒரு கடிதமும் சிக்கியுள்ளது. மேலும் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகிறார்கள். இந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# கொச்சியில் 70வது தென்னிந்திய ஃபிலிம்பேர் விருதுகள் வழங்கும் விழா



கோவை, பிப் 25-

ஃபிலிம்பேர் நிறுவனம், கேரளா சுற்றுலாத் துறையுடன் இணைந்து 70வது தென்னிந்திய ஃபிலிம்பேர் விருதுகள் வழங்கும் விழாவை முதன்முறையாக கொச்சியில் நடத்தியது. இதில் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய தென்னிந்திய தொழித் திரைப்படங்கள் பங்கு பெற்றன.இவ்விழாவில் 'அமரன்' 8 விருதுகளையும், 'மெய்யழகன்' 4விருதுகளையும் அமரன்' சிறந்த திரைப்படத்திற்கான விருதையும் பெற்றன. தமிழில் சிவகார்த்திகேயன், சாய் பல்லவி தெலுங்கில் அல்லு அர்ஜூன், மலையாளத்தில் மம்மூட்டி சிறந்த நடிகர்களுக்கு விருதை வென்றனர்.

ஆடு ஜீவதம் 5விருதுகளை வென்றது. கார்த்தி சிறந்த துணை நடிகருக்கான விருதும் பார்வதி திருவோத்து சிறந்த துணை நடிகைக்கான விருதையும் லப்பர் பந்து படத்திற்காகசுவாசிகாவும் விருதைப் பெற்றார். தங்கலான்' திரைப்படத்தில் வலிமையானநடிப்பிற்காக விக்ரமுக்கு 'சிறந்த நடிப்புக்கான விருது வழங்கப்பட்டது. சிறந்த நடிகர் (விமர்சகர்கள் தேர்வு) பிரிவில் 'கிஷ்கிந்தா காண்டம்' படத்திற்காக ஆசிப் அலி மற்றும் 'ஆடுஜீவிதம்' படத்திற்காக பிருத்விராஜ் ஆகிய இருவரும் அந்த விருதை பகிர்ந்து கொண்டனர் மேலும் இந்நிகழ்ச்சியில் தென்னிந்திய திரையுலக நட்சத்திரங்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# இந்திய திராவிட மக்கள் முன்னேற்ற கட்சி சார்பில்சட்டசபை தேர்தலில் 75 இடங்களில் போட்டி



ஈரோடு பிப். 25-

இந்திய திராவிட முன்னேற்றக் கட்சியின் ஆலோசனை கூட்டம் ஈரோட்டில் உள்ள ஒரு தனியார் விடுதியில் நடந்தது. மாநில தலைவர் குருசாமி தலைமையில் நடந்த இந்த கூட்டத்தில் ஈரோடு மாவட்ட தலைவர் ரமேஷ் வரவேற்றார். மாநில மகளிர் அணி செயலாளர் சிவகாமி முன்னிலை வகித்தார்.இதில் தேசிய தலைவர் மாரிமுத்து முதன்மை செயலாளர் சரவணன் புதியவன் என்ற சண்முகம் மாநில செயலாளர் முருகேசன் மாநில துணை தலைவர் சாமி நாதன் அவை தலைவர் வீரா கிருஷ்ணன் மாநில மகளிர் அணி சிறுபான்மை துறை செயலாளர் பூவாத்தாள் மாநில மகளிர் அணி செயலாளர் மேகலா உள்பட பலர் கலந்து கொண்டு பேசினர். கூட்டத்தில் புதிய நிர்வாகிகளுக்கு நியமன சான்று வழங்கப்பட்டது. மேலும் வருகிற சட்டசபை தேர்தலில் வேட்பாளர் தேர்வும் நடந்தது.

இதன் பிறகு நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு

வருகிற சட்டசபை தேர்தலில் கட்சியின் சார்பில் 75 வேட்பாளர்களை தேர்வு செய்து நிறுத்துவது தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டவுடன் எந்தெந்த தொகுதிகளில் போட்டியிடுவது யாரை வேட்பாளராக தேர்வு செய்வது என்பது குறித்து முடிவு செய்யப்படும் வேட்பாளர்களின் வெற்றிக்கு கட்சி நிர்வாகிகள் பாடுபடுவது மத்திய மாநில அரசு வழங்கும் நலத்திட்ட உதவிகள் பகுதியில் கிராமங்களில் உள்ள மக்களுக்கு போய் சேருவதில்லை இந்த நலத்திட்டங்கள் அனைவருக்கும் கிடைக்க பாடுபடுவது என்பது உட்பட பல்வேறு தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன .

கூட்டத்தில் நகர செயலாளர் சுப்பிரமணி பவானி தொகுதி செயலாளர் பெருமாள் மாநில துணை செயலாளர் சுவாமிநாதன் மாவட்ட செயலாளர் ரமேஷ் மற்றும் நிர்வாகிகள் அண்ணாதுரை கார்த்திக் ஜெயா ராசாத்தி காந்திமதி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# மார்த்தாண்டத்தில் ரயில்வே போலீஸ் ஸ்டேஷன் திறப்பு



மார்த்தாண்டம் பிப். 25-

கன்னியாகுமரி மாவட்டத்தில் ரயில்வே போலீஸ் ஸ்டேஷன் நாகர்கோவில் ரயில்வே ஸ்டேஷனில் 1984 ம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது. இந்த போலீஸ் ஸ்டேஷன் எல்லையானது திருநெல்வேலி மாவட்டம் தாமிரபரணி ஆற்றுப்பாலத்தில் துவங்கி கேரள மாநிலம் பாறசாலை ரயில்வே ஸ்டேஷன் வரை எல்லை சுமார் 127 கிலோ மீட்டர் தூரத்தை உள்ளடக்கியது.

நாகர்கோவில் ரயில்வே போலீஸ் ஸ்டேஷன் எல்லைக்குள் நடைபெறும் குற்ற சம்பவங்கள் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க அதிக நேரமும் பயண தூரம் இருந்தது. ரயில் பயணிகளின் நலனை கருத்தில் கொண்டு குழித்துறை ரயில் நிலையத்தில் போலீஸ் ஸ்டேஷன் அமைக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை வைத்தனர். இதனைத் தொடர்ந்து தமிழக முதல்வர் சட்டப்பேரவையில் அறிவிப்பு வெளியிட்டு அதற்கான அரசாணை 2025ல் அன்று பிறப்பிக்கப்பட்டது.

அதன்படி குழித்துறையில் புதிய ரயில்வே போலீஸ் ஸ்டேஷனை திருச்சி ரயில்வே எஸ் பி ராஜன் குத்து விளக்கு ஏற்றி திறந்து வைத்தார் திருவனந்தபுரம் கோட்ட பாதுகாப்பு ஆணையர் முகமது ஹனீப் முன்னிலை வகித்தார் திருநெல்வேலி ரயில்வே டிஎஸ்பி இளங்கோவன், மார்த்தாண்டம் இன்ஸ்பெக்டர் கேதரின் சுஜாதா திருநெல்வேலி இன்ஸ்பெக்டர் பிரியா மோகன், சப் இன்ஸ்பெக்டர் ஸ்டீபன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

திருச்சி ரயில்வே எஸ் பி ராஜன் கூறியதாவது:

ரயில்வே பயணிகள் மற்றும் பொதுமக்கள் வசதிக்காக மார்த்தாண்டத்தில் குழித்துறை ரயில்வே ஸ்டேஷனில் ரயில்வே போலீஸ் ஸ்டேஷன் அமைக்கப்பட்டுள்ளது.

திருச்சி ரயில்வே போலீஸ் கோட்டத்தில் 25 வது ஸ்டேஷன் ஆகும் கன்னியாகுமரி மாவட்டத்தில் இரண்டாவது ஸ்டேஷன் ஆகும்.

நாகர்கோவில் டவுன் ரயில்வே ஸ்டேஷன் முதல் பாறசாலை வரை 33 கிலோ மீட்டர் இதன் எல்லையாக உள்ளது ஒரு இன்ஸ்பெக்டர், 2 சப் இன்ஸ்பெக்டர் மற்றும் ஏட்டு உட்பட போலீசார் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு ரயில்வே எஸ் பி ராஜன் கூறினார்.

மார்த்தாண்டம் பகுதியில் ரயில்வே சம்பவங்கள் நாகர்கோவில் ரயில்வே ஸ்டேஷனில் வழக்கு பதிவு செய்யப்பட்டு வந்தது. நேற்று முதல் இந்த ஸ்டேஷனில் வழக்கு பதிவு செய்யப்பட உள்ளது

# எட்டையாபுரத்தில் முன்னாள் முதல்வர் செல்வி ஜெ. ஜெயலலிதாவின் 78 வது பிறந்தநாள் விழா



எட்டயபுரம் பிப்.25-

தமிழக முன்னாள் முதல்வரும் அதிமுகவின் முன்னாள் பொதுச்செயலாளருமான செல்வி ஜெ. ஜெயலலிதாவின் 78 வது பிறந்தநாள் விழா தமிழக முழுவதும் அதிமுக அரசியல் கட்சியினரால் கொண்டாடப்பட்டு அதிமுக சார்பில் பல்வேறு இடங்களில் பொது மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக தூத்துக்குடி மாவட்டம் எட்டையாபுரத்தில் தற்போதைய தமிழக எதிர்க்கட்சித் தலைவரும் அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமியின் ஆணைக்கிணங்க, முன்னாள் அமைச்சரும் தற்போதைய கோவில்பட்டி சட்டமன்ற உறுப்பினரும், அதிமுக தூத்துக்குடி வடக்கு மாவட்ட செயலாளருமான கடம்பூர் ராஜு அறிவுறுத்தலின்படி எட்டையாபுரம் அதிமுக நகர செயலாளர் ராஜ் குமார் ஏற்பாட்டில் எட்டையாபுரம் பேருந்து நிலையம் முன்பு அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த செல்வி ஜெ.ஜெயலலிதாவின் திருவுருவப்படத்திற்கு எட்டையாபுரம் அதிமுகவினர் மலர்தூவி மரியாதை செலுத்தினர் பின்பு பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாடினர்.

# பள்ளி வேன் மீது லாரி மோதியதில் 30 குழந்தைகள் காயம் சட்டமன்ற உறுப்பினர் ஆறுதல்



இராமநாதபுரம் பிப்,25-

ராமநாதபுரம் மாவட்டம் சத்திரக்குடி அருகே செயல்பட்டு வரும் தனியார் பள்ளி வாகனம் மாணவர்களை ஏற்றி

மதுரை தனுஷ்கோடி தேசிய நெடுஞ்சாலை சத்திரக்குடி அருகே சென்று கொண்டிருந்த போது பள்ளி வளாகத்தின் அருகில் திரும்பி கொண்டிருந்தபோது பள்ளி வாகனத்துக்கு பின்னால் வந்து கொண்டிருந்த லாரி கட்டுப்பாட்டை இழந்து முன்னாள் சென்ற பள்ளி வாகனத்தில் திடீரென மோதியது இதில் பள்ளி வாகனம் தலைக்குப்புற கவிழ்ந்தது வாகனத்தில் இருந்த 30க்கும் மேற்பட்ட பள்ளி மாணவ மாணவியர்கள் விபத்தில் சிக்கி காயம் அடைந்தனர் பள்ளி குழந்தைகளை அங்கிருந்த பொது மக்கள் பத்திரமாக மீட்டு சிகிச்சைக்காக ராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர் இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது விபத்து ஏற்படுத்திய லாரியை மீட்கும் பணியில் காவல்துறையினர் ஈடுபட்டனர், மேலும் இச்சம்பவம் தொடர்பான தகவல் அறிந்து வந்த சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் மருத்துவமனைக்கு விரைந்து சென்று காயமுற்ற பள்ளி குழந்தைகளை சந்தித்து அவர்களின் பெற்றோரிடம் ஆறுதல் கூறினார்,

# வண்ணார் சமூக அமைப்பானவீரபத்திரர் ராஜகுல பேரவை 7அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம்



சென்னை, பிப்.25-

வீரபத்திர் ராஜகுல பேரவை சார்பாக வண்ணார் குல 5% உள் ஒதுக்கீடு உள்ளிட்ட 7அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி சென்னை எழும்பூர் ராஜஸ்தான் விளையாட்டு அரங்கம் அருகில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது .

பேரவைத் தலைவர் பொறியாளர் .வசந்தன் தலைமை நடைபெற்ற ஆர்பாட்டத்தில் வண்ணார் குல சமூகத்தினருக்கு 5% உள்ஒதுக்கீடு மற்றும் 7 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது .


மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பிரிவில் இருக்கும் வண்ணார் சமூகத்திற்கு பொருளாதாரத்திலும், வேலை வாய்ப்பிலும் பலன்கள் சென்றடைவதில்லை. 80 இலட்சம் பேருக்கும் அதிகமாக உள்ள எங்கள் சமூகத்திற்கு 5% உள் ஒதுக்கீடு வழங்க கோரியும், அரசு பதிவேட்டில் உள்ள வண்ணார் என்ற பதத்தை நீக்கி ராஜகுலத்தோர் என்று சட்டம் இயற்றி அரசு பதிவேட்டில் வெளியிட கோரியும், எங்கள் சமூகத்திற்கு என்று சட்டமன்ற உறுப்பினர், மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி மன்றங்களில் அரசியல் பிரதிநி தித்துவம் கிடைப்பதில்லை. இதில் எங்களுக்கு தனித் தொகுதிகள் வழங்க வேண்டும்.

வண்ணார் சமூகத்திற்கு சொந்தமான நிலங்கள் கோ யில்கள் மடங்கள் போன்ற ஆக்கிரமிப்பிற்கு உள்ளாகி உள்ள இடங்களை மீட்டு எங்கள் சமூகத்திற்கு ஒப்படைத்த ஆவண செய்ய கோரியும் சமூகத்தை மேம்படுத்த தனி நல வாரியம் ஒன்றினை அமைத்து அமைக்க வேண்டிய ஆர்ப்பாட்டம் நடைபெற்றது .

மேலும் இந்த ஆர்பாட்டத்தில் மாநில துணை பொதுச் செயலாளர் மேனாகுமார், பொருளாளர் கே .எஸ் .சுப்புராஜ், தென் சென்னை மாவட்ட செயலாளர் தண்டபாணி, அரியலூர் மாவட்டச் செயலாளர் அண்ணாதுரை, செங்கல்பட்டு மாவட்டச் செயலாளர் தங்கராஜ் , கடலூர் மாவட்டச்செயலாளர் பழனி, மகளிரணியின்உஷா, மஞ்சு மற்றும் பஞ்சாட்சரம் உள்ளிட்ட 500க்கும் மேற்பட்ட மாநில, மாவட்ட நிர்வாகிகள் இதில் கலந்து கொண்டனர்

# கமுதியில் போதையில் காரை தாறுமாறாக ஓட்டி விபத்து ஏற்படுத்திய வாலிபர் மீது 4 பிரிவுகளில் வழக்கு பதிவு





இராமநாதபுரம் பிப்,25-

கமுதியில் குடிபோதையில் காரை தாறுமாறாக ஓட்டி வாகனங்கள் கடைகள் மீது மோதி சேதத்தை ஏற்படுத்திய வாலிபர் உட்பட 4பேர் மீது போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர், ராமநாதபுரம் மாவட்டம் கமுதி வார சந்தை பேட்டை அருகேயுள்ளது சிங்கபுலியாபட்டி இந்த பகுதியை சேர்ந்தவர் நாகவடிவேல் (29) இவர் நேற்று தனதுகாரில் நண்பர்களான முனியசாமி(36) உள்ளிட்ட நான்கு பேருடன் கமுதிவந்தார் காரை நாகவடிவேல் ஓட்டிவந்தார் ஏற்கனவே நான்கு பேரும் மது அருந்தியிருந்தனர் மீண்டும் மது அருந்த. நினைத்தனர் இதற்காக கமுதி பேரூந்துநிலையம் எதிரே குண்டாற்று கரையில் உள்ள டாஸ்மாக் கடைக்கு சென்றனர் அப்போது எதிரே டுவிலரில் அலெக்ஸ் பாண்டியன் (30) என்பவர் வந்தார் போதையில் இருந்த நாகவடிவேல் அவருக்கு வழிவிடாமல் மோதியதில் டுவிலர் சேதமடைந்தது அலெக்ஸ் பாண்டியன் இதுகுறித்து தட்டிக் கேட்க வந்தபோது காரில் இருந்து முனியசாமி மற்றும் 2 பேர் கிழேஇறங்கி சமாதானம் பேச சென்றனர் இதனால் ஆத்திரமடைந்த நாகவடிவேல் காரை வேகமாக ஓட்டிசென்று மோத முற்பட்டபோது அலெக்ஸ் பாண்டியன் மற்றும் 2 பேர் அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பினர் முனியசாமிக்கு காலில் அடிபட்டு எலும்புமுறிவு ஏற்பட்டதுதொடர்ந்து காரை போதையில் தாறுமாறாக ஓட்டிய நாகவடிவேல் பஸ்நிலைய பகுதியில் உள்ள கடைகள் வாகனங்கள் மற்றும் பொதுமக்கள் மீது ஏற்றியுள்ளார் இதனால் அந்த பகுதில் முக்கால் மணி நேரத்திற்கும் மேலாக பரபரப்பாக காணப்பட்டது காரை ரிவர்ஸ் எடுத்தும் வேகமாக ஓட்டியும் சென்றதால் காரை யாரும் மறிக்கவோ தடுத்துநிறுத்தவோ முடியவில்லை கடைசியாக காரின் மீதும் பழக்கடையின் மீது மோதி நின்றது இதனைதொடர்ந்து அந்த பகுதியில் இருந்த மக்கள் ஓடிவந்து காரை சூழ்ந்து கொண்டனர் மதுபோதையில் இருந்த நாகவடிவேலை காரில்வைத்தும் வெளியே இழுத்து சென்று தர்மஅடி கொடுத்து போலீசாரிடம் ஒப்படைத்தனர் காயமடைந்த முனியசாமி உள்ளிட்டோரை கமுதி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர் இந்த சம்பவம் தொடர்பாக கமுதி போலீசார் நாகவடிவேல்மீது 4பிரிவுகளிலும் முனியசாமி உட்பட மேலும் இருவர் மீதும் வழக்குபதிவு செய்து விசாரணை நடத்திவருகின்றனர் இந்த வீடியோ சமூக வலைதளங்களில் படுபயங்கரமாக வைரலாகி வருகின்றது,



கிருஷ்ணகிரி லட்சுமி மஹாலில், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பாக, மா பயிரில் பூச்சி மற்றும் நோய் மேலாண்மை குறித்து மாவட்ட அளவிலான கருத்தரங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் குத்து விளக்கு ஏற்றி வைத்து, உரையாற்றினார். உடன், தோட்டக்கலைத்துறை இணை இயக்குநர் .இந்திரா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் வேளாண்மை .ஏஞ்சலின் பொன்ராணி, தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் .குணவதி, வேளாண் வணிகம் மற்றும் விற்பனை துறை துணை இயக்குநர் .மோகன், வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் .நிர்மலதா உள்ளிட்ட பலர் உள்ளனர்.

## தென்காசியில் சாலையோர கடைகளை அப்புறப்படுத்த கூறும் நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாக வியாபாரிகள் கண்ணீர்



தென்காசி , பிப்.25-

தென்காசி மாவட்டம் தென்காசி புதிய பேருந்து நிலையத்தில் இருந்து குத்துக்கல்வலசை செல்லும் சாலையின் ஓரமாக நீண்ட நாட்களாக நடைபாதை வியாபாரிகள் வணிகம் செய்துவரும் நிலையில் இவர்களுக்கு தென்காசி நகராட்சி நிர்வாகத்தின் சார்பில் உரிமமும் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் திடீரென நெடுஞ் சாலைத்துறை அதிகாரிகள் கடைகளை காலி செய்யக் கூறுகின்றனர் இதன் காரணமாக தங்களுடைய வாழ்வாதாரம் மட்டுமின்றி தங்களை நம்பி உள்ள குடும்பத்தினரின் வாழ்வாதாரமும் பாதிப்புக்குள்ளாகும் சூழல் ஏற்பட்டுள்ளதாகவும் ஆகவே நெடுஞ்சாலை துறை அதிகாரிகள், மாவட்ட நிர்வாகம் இதை கவனத்தில் கொண்டு நடைபாதை வியாபாரிகளின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக்கூறி நடைபாதை வியாபாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும் நகராட்சி நிர்வாகத்தினர் வியாபாரம் செய்ய அனுமதி வழங்கிய நிலையில் வியாபாரம் செய்யக் கூடாது எனக் கூறி நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள் பிரச்சினையில் ஈடுபட்டு வரும் சம்பவம் வியாபாரிகள் மத்தியில் கவலையை ஏற்படுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது



தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக புதிய கூட்டரங்கில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ரஞ்ஜீத்சிங், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், கண்காணிப்பு குழுத் தலைவர் / தேனி பாராளுமன்ற உறுப்பினர் திரு.தங்க தமிழ்செல்வன் அவர்கள் முன்னிலையில் உலகத் தாய்மொழி நாள் உறுதிமொழியினை அனைத்துத்துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஏற்றுக்கொண்டனர்.

## சங்கரன்கோவிலில் மகளிருக் காண வெல்லும் தமிழ் பெண்கள் பிரச்சார இயக்கம் மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ துவக்கி வைத்தார்



சங்கரன்கோவில். பிப்.25-

தமிழ்நாடு முதலமைச்சர், திமுக தலைவர் முக ஸ்டாலின் உத்திரவின் படி, வெல்லும் தமிழ் பெண்கள் என்ற தலைப்பில்,

ஐந்தாண்டு கால திமுக அரசின் மகளிர் மேம்பாட்டிற்கான வளர்ச்சிக்கான திட்டங்களை மக்களிடத்தில் நேரடியாக பரப்புரையாற்றும் மக்கள் சந்திப்பு இயக்கம் மற்றும்

ஸ்டாலின் மகளிர் படையின் பிரச்சாரம் சங்கரன்கோவில் நகரத்தில் 25 வது வார்டு பகுதியில் இருந்து துவக்கி வைக்கும் நிகழ்ச்சி நடந்தது. தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ கலந்துகொண்டு பிரச்சார இயக்கத்தை துவக்கி வைத்தார். நிகழ்ச்சியில் வடக்கு மாவட்ட பொருளாளர் சரவணன்,

நகர செயலாளர் பிரகாஷ், நகராட்சி சேர்மன் கௌசல்யா வெங்கடேஷ், மகளிர் அணி அமைப்பாளர் சிவசங்கரி, மாவட்ட மகளிர் அணி துணை தலைவர் அண்ணாமலை ,

பொதுக்குழு உறுப்பினர் மகேஸ்வரி, நகர அவை தலைவர் முப்பிடாதி,

நகரத் துணை செயலாளர் சுப்புத்தாய்,

மாவட்ட பிரதிநிதி டைட்டஸ்ஆதித்தன், ஐ டி விங்க் சிவசங்கரநாராயணன், வார்டு செயலாளர் வெள்ளத்துரை, முன்னாள் வர்த்தக அணி பத்மநாபன் மற்றும் கட்சி நிர்வாகிகள், மகளிர் அணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# கிருஷ்ணகிரியில் முன்னாள் முதல்வர் செல்வி ஜெ. ஜெயலலிதாவின் 78 வது பிறந்தநாள் விழா கொண்டாட்டம்



கிருஷ்ணகிரி பிப் 25-

தமிழக முன்னாள் முதல்வரும் அதிமுகவின் முன்னாள் பொதுச்செயலாளருமான செல்வி ஜெ.ஜெயலலிதாவின் 78 வது பிறந்தநாள் விழா தமிழக முழுவதும் அதிமுக சார்பில் பல்வேறு இடங்களில் பொது மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட அதிமுக சார்பில் தற்போதைய தமிழக எதிர்க்கட்சித் தலைவரும் அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமியின் ஆணைக்கிணங்க, கழகத் துணைப் பொதுச் செயலாளர் கே.பி.முனுசாமியின் வழிகாட்டுதலின்படி கிருஷ்ணகிரியை அடுத்த தாளாபள்ளியில் மகளிர் அணி செயலாளர் சுமதிமாது தலைமையில், அதிமுக கிழக்கு மாவட்ட செயலாளர் அசோக்குமார் முன்னிலையில் பெத்ததாளாபள்ளி எம்ஜிஆர் சிலை அருகே அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த செல்வி ஜெ.ஜெயலலிதாவின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது. பின்பு பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கியும், ஆயிரத்திற்கும் மேற்பட்டோருக்கு அன்னதானமும், தூய்மை பணியாளர்களுக்கு வேஸ்டி சேலைகளும் வழங்கி கொண்டாடினர். இதே போல கிருஷ்ணகிரி ரவுண்டானா, கிருஷ்ணகிரி பழையபேட்டை, வேட்டியம்பட்டி, பணிமனை என பல்வேறு இடங்களில் செல்வி. ஜெ ஜெயலலிதா அவர்களின் பிறந்த தினம் வெகு விமர்ச்சியாக கொண்டாடப்பட்டது. மேலும் இந்த விழாவின் போது ஒன்றிய செயலாளர் சோக்கடிராஜன், கன்னியப்பன், சூர்யா, நகரச் செயலாளர் கேசவன், மாநில மகளிர் அணி துணைச் செயலாளர் பரிதாநவாப், சோபன்பாபு, ஐடி விங் வேலன் ,மாவட்ட எம்.ஜி.ஆர்.மன்ற இணைச் செயலாளர் சின்னதம்பி, நகர துணைத் தலைவர் குரு. முன்னாள் நகர் மன்ற துணைத் தலைவர் வெங்கடசலம், வர்த்தக அணி துணை தலைவர் பெருமாள், அதிமுக கட்சியை சேர்ந்த வாசுதேவன், சீனி, ரத்தினவேல், ஜெயஆஜி, ரமேஷ் குமார் உள்ளிட்ட ஏராளமானவர்கள் இவ்விழாவில் கலந்துக் கொண்டனர்.

## அய்யா வைகுண்டர் நினைவாக சுவாமி தோப்பில் மணிமண்டபம் கட்ட வேண்டும் அரசுக்கு அகில இந்திய தமிழர் கழகம் கோரிக்கை

நாகர்கோவில் பிப். 25-

அய்யா வைகுண்டர் நினைவாக கேரள அரசு மணிமண்டபம் கட்ட முன்வந்துள்ளதை போன்று, தமிழ்நாடு அரசும் அய்யா வைகுண்டருக்கு சுவாமி தோப்பில் மணிமண்டபம் கட்ட முன் வர வேண்டும் என்று அகில இந்திய தமிழர் கழகத்தின் நிறுவனர் முத்துக்குமார் கோரிக்கை விடுத்துள்ளனர். இது குறித்து முத்துக்குமார் கூறியதாவது:



'தாழக்கிடப்பாரை தற்காப்பதே தர்மம்' என்று சமுகத்தால் ஒடுக்கப்பட்ட, பின்தங்கிய, ஏழை எளிய மக்களை காத்து, அவர்களுக்கு சமுகநீதி வழங்கி சமத்துவத்துடன் வாழ வைக்க வேண்டும் என்பதே அய்யா வைகுண்டரின் சமதர்ம மகத்துவமாகும். அவரின் கேரள அரசு திருவனந்தபுரத்தில் மணிமண்டபம் கட்ட முன் வந்துள்ளது. அதற்குரிய அடிக்கல் நாட்டு விழாவும் வருகிற 28 ந்தேதி கேரள முதல்வர் பிரனாய் விஜயன் தலைமையில் நடைப்பெற இருக்கிறது. அதே போன்று தமிழ்நாடு அரசும் அய்யா வைகுண்டரின் தலைமைபதியான கன்னியாகுமரி மாவட்டம் சுவாமிதோப்பில் மணிமண்டபம் கட்ட முன் வர வேண்டும். அதற்காக அறி விப்பை தேர்தல் அறிக்கையில் வேளியிட வேண்டும். இவ்வாறு முத்துக்குமார் கூறியுள்ளார்.

## வேலைவாய்ப்பில் இட ஒதுக்கீட்டை பின்பற்றாத மத்திய அரசை கண்டித்து மார்ச் 3 ஆம் தேதி மத்தி ய அரசு அலுவலகங்கள் முன்ஆர்ப்பாட்டம்

### தி.க. தலைவர் கி.வீரமணி அறிவிப்பு




தஞ்சாவூர் பிப்.25-

தஞ்சாவூர் திலகர் திடலில் திராவி டர் கழக இளைஞர் அணி திராவிட மாணவர் கழக மாநில மாநாடு திராவிடர் மாணவர் கழக மாநில செயலாளர் செந்தூரப் பாண்டியன் தலைமையில் நடைபெற்றது திராவிட கழக மாவட்ட காப்பாளர் அய்யனார் மாவட்ட தலைவர் அமர் சிங் மாவட்ட செயலாளர் அருண கிரி மற்றும் நிர்வாகிகள் முன்னி லை வகித்தனர். திராவிட கழக இளைஞரணி மாநில துணைச் செயலாளர் வெற்றி குமார் வரவேற்புரையாற்றினார். மாநாட்டில் மத்திய அரசு நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திராவிடர் கழக தலைவர் கி. வீரமணி பேசியதாவது,

சட்டசபை தேர்தலில் மு.க.ஸ்டாலின் வெற்றி பெறுவது உறுதி. மு.க.ஸ்டாலினுக் கு முதல்வராக பதவிப்பிரமாணம் செய்து வைக்க கவர்னர் ஆர்.என். .ரவி இருக்க வேண்டும். வேலைவாய்ப்பில் இட ஒதுக்கீட்டை பின்பற்றாத மத்திய அரசை கண்டித்து மார்ச் 3 ஆம் தேதி மத்திய அரசு அலுவலகங்கள் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெறும் என கூறினார். மாநாட்டில் திமுக துணை பொது செயலாளரும், முன்னாள் மத்திய அமைச் சருமான ஆ.ராசா, முன்னாள் மத்திய இணை அமைச்சருமான திமுக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினருமான எஸ்.எஸ்.பழனி மாணிக்கம்,மத்திய மாவட்ட செயலாளர் துரை.சந்திர சேகரன்,முன்னாள் அமைச்சர் வைத்திலிங்கம் பாராளுமன்ற உறுப்பினர் முரசொலி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் குத்தாலம் கல்யாணம் மாநகராட்சி மேயர் சண். இராமநாதன்,துணை மேயர் அஞ்சுகம் பூபதி திராவிடர் கழக பொதுச் செயலாளர் வி. அன்புராஜ் துணை தலைவர் கலி.பூங்குன்றன், இளைஞர் அணி மாநில செயலாளர் நாகை நாத்திகம் பொன்முடி உட்பட பலர் கலந்து கொண்டனர் மாவட்ட திராவிட கழக இளைஞரணி தலைவர் பிரகாஷ் நன்றியுரையாற்றினார்.

# டெர்ரா ஸ்பேஸ் துளிர் நிறுவனத்தின் வீட்டுமனைகள் திறப்பு விழா



கோவை பிப்:25-

கோவை மாவட்டம் வீரப்பனூர் பிச்சனூரில் பகுதியில் டெர்ரா ஸ்பேஸ் துளிர் நிறுவனத்தின்

141 மனைகள் கொண்ட புதிய வீட்டுமனைகள் விற்பனை துவக்க விழா நல்லறம் அறக்கட்டளை தலைவர் திரு.எஸ்.பி.அன்பரசன் குத்துவிளக்கேற்றிதுவக்கி வைத்தார்.

மேலும் அவர் சிறப்புரையாற்றுகையில் நீச்சல் குளம்,டர்ப் வாலிபால் மைதானம்,சிறுவர்கள் விளையாட்டு பூங்கா,சுற்றிலும் மரங்கள்,சோலார் விளக்குகளுடன் பசுமை நிறைந்த சூழ்நிலையில் உருவாக்கப்பட்டுள்ள இம்மனைகளை அனைவரும் பெற்று பயன்பெற வேண்டுமாய் அன்போடு கேட்டுக் கொண்டார்.

மேலும் வீட்டு மனைகள் வாங்குவதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் 90% வரை வங்கி கடன் உதவி பெறவும் இங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதையும் குறிப்பிட்டு எடுத்துரைத்தார் இந்நிகழ்வில் டெரா ஸ்பேஸ் நிறுவனர் திரு.ஷி.சுரேஷ்குமார் மற்றும் அவர் குடும்பத்தினர் அமுதா,சுபாஷ், சுருதி ஆகியோர் அனைவரையும் வரவேற்று கௌரவித்தனர். நிகழ்வின் இறுதியில் கதிரேசன் அனைவருக்கும் நன்றி கூறினார். இந்நிகழ்வுகள் அனைத்தையும் ரோட்டரி ஷி மணிகண்டன் தொகுத்து வழங்கினார்.

## திருவண்ணாமலை அருகேரயில்வே சுரங்கப்பாதை அமைக்க விவசாயிகள் எதிர்ப்பு



திருவண்ணாமலை பிப்.25-

திருவண்ணாமலை அடுத்த தண்டரை கிராமத்தில் ரயில்வே சுரங்கப்பாதை அமைப்பதற்கு விவசாயிகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

திருவண்ணாமலை அடுத்த வெறையூர் அருகே உள்ள தண்டரையில் ரயில்வே நிலையம் அமைந்துள்ளது.

இந்த ரயில்வே தண்டவாளத்தை தினமும் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பலதரப்பட்ட வாகனங்கள் கடந்து செல்கிறது. இதில் சர்க்கரை ஆலைக்கு கரும்பு ஏற்றுச் செல்லும் லாரிகளும் அடங்கும்.இந்நிலையில் இங்கு சுரங்கப்பாதை அமைப்பதற்கான பணிகள் நேற்று முன்தினம் துவங்கியது. இதைக் கேள்விப்பட்டதும் சுற்றுப்புற பகுதியிலிருந்து பொதுமக்களும், விவசா யிகளும் திரண்டு வந்து பணியை தடுத்து நிறுத்தினர். இதனால் சுரங்கப்பாதை அமைக்கும் பணி நிறுத்தப்பட்டது. இந்த போராட்டத்தால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

இதைத் தொடர்ந்து திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறை தீர்வு நாள் கூட்டத்தில் தண்டரை ரயில்வே சுரங்கப்பாதை அமைப்பதற்கு பதிலாக மேம்பாலம் அமைத்திட கோரி மனு அளிக்கப்பட்டது.

ஆனானந்தல், மதுராம்பட்டு, அண்டம்பள்ளம், நாரையூர், இசுக்கழி காட்டேரி, கீழ்கரிப்பூர், ஆண்டியாப்பாளையம், தண்டரை ஆகிய பகுதிகளில் 500 ஏக்கர்களுக்கு மேல் கரும்பு பயிரிடப்படுவதாகவும், சுரங்கப்பாதை அமைக்கப்பட்டால் திருக்கோயிலூர் பண்ணாரி சர்க்கரை ஆலைக்கு லாரிகளில் கரும்பு எடுத்துச் செல்ல முடியாத நிலை ஏற்படும் என்பதால் ரயில்வே மேம்பாலம் அமைத்து தர வேண்டுமென அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பரமக்குடி அரசு கல்லூரியில் கௌரவ விரிவுரையாளர்களுக்கு ஆதரவாக இந்திய மாணவர் சங்கம் போராட்டம்



பரமக்குடி பிப்.25-

:பரமக்குடி அரசு கலைக்கல்லூரியில் கவுரவ விரிவுரையாளர்கள் 6 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி, 16 நாட்களாக பணி புறக்கணிப்பு செய்து கேட்டு போராட்டத்தில் ஈடுபட்டு வரும்நிலையில், ஆதரவாக இந்திய மாணவர் சங்கம் மாணவருடன் இணைந்து ஆர்ப்பாட்டம் செய்தனர்


தமிழகம் முழுவதும் உள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் சுமார் 8000 திற்கு மேற்பட்ட கௌரவ விரிவுரையாளர்கள் பணியாற்றி வருகின்றனர். பணி நிரந்தரம், நீதிமன்ற உத்தரவின்படி யுஜிசி ஊதியம் 57, 700, பெண் கவுரவ விரிவுரையாளர்களுக்கு சம்பளத்தும் கூடிய மகப்பேறு விடுப்பு, 12 மாத சம்பளம் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி பணியை புறக்கணித்து போராடி வருகின்றனர். இந்த நிலையில், பரமக்குடி அரசு கலை கல்லூரியில் பணியாற்றக்கூடிய 40 பெண் கவுரவ விரிவுரையாளர்கள் உட்பட 71 கௌரவ விரிவுரையாளர்கள் கடந்த 15 நாட்களாக கையெழுத்து இடாமல் பனியை புறக்கணிப்பு செய்து உள்ளிருப்பு போராட்டத்தை ஈடுபட்டுள்ளனர்.நேற்று,கௌரவ விரிவுரையாளர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் இந்திய மாணவர் சங்கத்தினால் மாணவருடன் சேர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் .

பரமக்குடி அரசு கலைக்கல்லூரியில் கவுரவ விரிவுரையாளர்கள் 16 நாள் ஆர்ப்பாட்டத்தில் இந்திய மாணவர் சங்கத்தினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



வேலூர் மாநகர் மாவட்டம் 24வது வார்டு செயலாளர் வினோத் தலைமையில் முன்னாள் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ.ஜெயலலிதாவின் வது பிறந்த தினத்தை முன்னிட்டு மாநகர மாவட்ட செயலாளர் எஸ்ஆர்கே.அப்பு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி அன்னதானம் வழங்கினார். உடன் மாவட்ட பொருளாளர் மூர்த்தி ஏபிஎல் சுந்தரம் சிவாஜி சத்துவாச்சாரி பகுதி செயலாளர் ஜெயக்குமார் தாஸ் மற்றும் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## வசவப்புரம் மறைந்த முன்னாள் தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் 78வது பிறந்தநாள் விழா



தூத்துக்குடி, பிப்.25-

தூத்துக்குடி வடக்கு மாவட்ட அதிமுக சார்பில் கருங்குளம் வடக்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட வசவப்புரம் மெயின் ரோட்டில் அம்மா ஜெயலலிதா அவர்களின் 78வது பிறந்த நாளை முன்னிட்டு அலங்கரித்து வைத்த அம்மாவின் திருவுருவ படத்திற்கு கருங்குளம் வடக்கு ஒன்றிய செயலாளரும் முன்னாள் கருங்குளம் ஒன்றிய துணைத் தலைவருமான லட்சுமணப்பெருமாள் தலைமையிலும், தூத்துக்குடி வடக்கு மாவட்ட இணை செயலாளரும் பேச்சியம்மாள் அவர்களின் முன்னிலையில் நடைபெற்ற விழாவில் அம்மா பேரவை செயலாளர் விஜய உடையார் மாவட்ட சிறுபான்மையினர் அணித்தலைவர்ஒ.பி.முஸ்தபா, ஒன்றிய இளைஞர் அணி செயலாளர் சரவணன், மாவட்ட பிரதிநிதி இசக்கிதுரை, மகளிர் அணி ஒன்றிய செயலாளர் ஒளவையார், மாவட்ட எம்ஜிஆர் அணி இணைச் செயலாளர் ரேவதி பி.கந்தசாமி, எம்ஜிஆர் மன்றச் செயலாளர் செல்லப்பா, மற்றும் கிளை கழக செயலாளர்கள் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.பின்னர் பொது மக்களுக்கு லட்டு, இனிப்பு வழங்கப்பட்டது,இந்த நிகழ்ச்சியில் கழக நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்

## செந்நெல்பட்டி முன்னாள் தமிழக முதல்வரும் கட்சி பொது செயலாளருமான இதய தெய்வம் ஜெ.ஜெயலிதாவின் 78வது பிறந்தநாள் விழா



செந்நெல்பட்டி, பிப்.25-

செந்நெல்பட்டி முன்னாள் தமிழக முதல்வரும் கட்சி பொது செயலாளருமான இதய தெய்வம் ஜெ.ஜெயலிதாவின் 78வது பிறந்த நாளை முன்னிட்டு அவரது திருவுருவ முன்னாள் தமிழக முதல்வர் எடப்பாடிk. பழினிசாமி மற்றும் TTV ஆணைக்கங்க மற்றும் தூத்துக்குடி மாவட்ட கழக செயலாளர் கடம்பூர் ராஜி மற்றும் அமமுக வடக்கு மாவட்ட செயலாளர் ஜெனியல் சாமுவேல் சலமோன் ராஜ் அறிவுறுத்தலின் படி TTV.அம்மாவின் 78வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு செந்நெல்பட்டியில் தூத்துக்குடி மாவட்ட13வது வார்டு கவுன்சிலர் S. பேச்சிஅம்மாள் தூத்துக்குடி மாவட்டம் கழக இணை செயலாளர் தலைமையில் மற்றும் சிறப்பு விருந்தினராக திருநெல்வேலி அதிமுக மாவட்டம் தகவல் தொழில் நுட்ப பிரிவு செயலாளர் S. அன்பு அங்கப்பன் கலந்து கொண்டார் விழாவில் அமமுக தூத்துக்குடி மாவட்ட அம்மா பேரவை இணை செயலாளர் M.அரியமுத்து பாண்டியன் அமமுக கிளை செயலாளர் ராசப்பன் அமமுக மாணவர் அணி துணை செயலாளர் மருதநாயகம் அதிமுக கிளை செயலாளர் . மகேஷ் சண்முகம் மற்றும் பல நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## 78 வது பிறந்தநாள் விழா: ஜெ., படத்திற்கு தளவாய்சுந்தரம் மரியாதை



தென் தாமரைக்குளம் பிப். 25-

முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் 78 வது பிறந்த நாளை முன்னிட்டு சாமி தோப்பில் ஜெ படத்திற்கு தளவாய்சுந்தரம் எம்எல்ஏ மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட மாணவரணி தலைவர் வக்கீல் பார்த்தசாரதி தலைமை வகித்தார்.திரைப்பட இயக்குனர் அன்பழகன்,முன்னாள் ஊராட்சி தலைவர் மதிவாணன் ஆகியோர் முன்னிலை வகித்தார். சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட கன்னியாகுமரி எம்எல்ஏ தளவாய் சுந்தரம் மலர் தூவி மரியாதை செலுத்தி பொதுமக்கள் கட்சி தொண்டர்களுக்கு இனிப்பு வழங்கினார். நிகழ்ச்சியில் சாமி தோப்பு அய்யா வைகுண்டசாமி தலைமை பதி நிர்வாகி சாமி,அகஸ்தீஸ்வரம் ஒன்றிய செயலாளர் தாமரை தினேஷ், பொருளாளர் தங்கவேல், வக்கீல் ராஜேஷ், பாஜக ஒன்றிய முன்னாள் கவுன்சிலர் ராம்குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# சுசீந்திரம் தாணு மாலைய சுவாமி கோவிலில் மாசி திருக்கல்யாண திருவிழா தொடங்கியது

சுசீந்திரம், பிப்.25-

சுசீந்திரம் தாணு மாலைய சுவாமி கோவிலில் வருடம் தோறும் சுவாமிக்கும் அறம்வளர்த்தநயகி அம்மனுக்கும் திருக்கல்யாண விழா தொடர்ந்து ஒன்பது நாட்கள் திருவிழா நடைபெறுவது வழக்கம் அதுபோல திருக்கல்யாண திருவிழா நிகழ்ச்சி துவங்கியது அதனை முன்னிட்டு நேற்று முன் தினம் மாலை 6 மணிக்கு அறம் வளர்த்த நாயகி அம்மனை அலங்காரமண்டபத்தில் எழுந்தருளச் செய்து சிறப்பு அலங்கார தீபாரதனை நடைபெற்றது தொடர்ந்து வருகிற விழா நாட்களில் தினமும் அம்மனுக்கு சிறப்பு அபிஷேக அலங்கார தீபாரதனையும் காலை மற்றும் மாலை வேளையில் சிங்க வாகனம் அன்ன வாகனம் பல்லக்கு வாகனம் கமல வாகனம் ஆகிய வாகனங்களில் அம்மன் நான்கு ரதவீதியை வலம் வரும்



நிகழ்ச்சிகளும் நடைபெறுகிறது வருகிற 2ஆம்தேதி காலை அறம் வளர்த்த நாயகி அம்மனை ஊர்வலமாக பறக்கை காசி விஸ்வநாதர் கோவில் கொண்டு சென்று அங்கு நீராடி அங்கிருந்து மேளதாளங்கள் முழங்க ஆசிரமம் விநாயகர் கோவில் கொண்டு வந்து இருப்பு வைப்பார்கள் பின்பு சுவாமியை மணப்பெண் கோலத்தில் அலங்கரித்து மேள தாளங்கள் முழங்க அலங்கரிக்கப்பட்ட வாகனத்தில் வைத்து ஊர்வலமாக தாணு மாலையசுவாமி கோவில் ரத விதியை சுற்றி கோவில் உள் உள்ள அலங்கார மண்டபத்தில் வைத்து இரவு 7.30 மணிக்கு தாணுமாலய சுவாமி கையில் உள்ள திருமாங்கல்யம் அற வளர்த்த நாயகி அம்மன் கழுத்தில் அர்ச்சதகர்கள் மந்திரம் ஓத மேளதாளங்கள் முழங்க கட்டப்பட்டு திருமங்கல வைவாகமும் நடைபெறுகிறது தொடர்ந்து பக்தர்களுக்கு வெற்றிலை பாக்கு மஞ்சள் கயிறு மஞ்சள் சந்தனம் குங்குமம் பிரசாதமாக வழங்கப்படுகின்றது இதில் உள்ளூர் மட்டுமின்றி வெளியூர் பக்தர்களும் பெருமளவு கலந்து கொள்வார்கள் 9 ஆம் நாளான வருகிற 3ஆம் தேதி அம்மன் இந்திரன் தேராகிய சப்பர தேரில் திருவீதி உலா வரும் நிகழ்ச்சி நடைபெறுகிறது அன்று சந்திர கிரகணம் என்பதால் மதியம் முதல் இரவு வரை கோயில் நடை சாத்தப்பட்டு இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது விழா ஏற்பாடுகளை கோவில்களின் இனண ஆணையர் ஜான்சி ராணி கண்காணிப்பாளர் ஆனந்த் கோவில் மேலாளர் ஆறுமுகதரன் கணக்கர் கண்ணன் தாணுமாலையசுவாமி கோயில் பக்தர்கள் பொதுமக்கள் இணைந்து செய்து வருகின்றனர்

# வேலூர் மாவட்டம் விஐடி பல்கலைக்கழகத்தில் ரிவேரா கலை விழா பிப்.26ல் தொடக்கம்

வேலூர் பிப்.25-

18,000 பங்கேற்பாளர்கள், ரூ.25 லட்சத்துக்கும் அதிகமான பரிசு தொகை!

சுனிதா சவுஹான், எஸ்.தமன், பென்னி தயாள், பிரதீப்குமார் இசை பிரபலங்கள் பங்கேற்பு!

வேலூர்: வேலூர் விஐடி பல்கலைக்கழகத்தில் ரிவேரா 2026 கலை விழா பிப்ரவரி 26ம் தேதி தொடங்கி மார்ச் 1ம் தேதி வரை நான்கு நாட்கள் நடைபெற உள்ளது.

இதில் 18,000 பங்கேற்பாளர்கள், ரூ.25 லட்சத்துக்கும் அதிகமான பரிசு தொகை வழங்கப்பட உள்ளது. முதன்மை நிகழ்வாக சுனிதா சவுஹான், எஸ்.தமன், பென்னி தயாள், பிரதீப்குமார் இசை பிரபலங்கள் பங்கேற்கின்றனர். இதுகுறித்து, விஐடி வேந்தர் கல்விக்கோ முனைவர் கோ. விசுவநாதன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:2002ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட ரிவேரா கலை விழா இந்த ஆண்டு அதன் 23ஆவது பதிப்பாக கொண்டாடப்படுகிறது. ப்ரீரிவேரா நிகழ்வுகள் பிப்ரவரி 19 முதல் 22 வரை நடைபெற்று முடிந்தன. ப்ரீ ரிவேரா விளையாட்டு நிகழ்வுகள் பிப்ரவரி 3 முதல் 22 வரை நடத்தப்பட்டன. முதன்மை ரிவேரா கலை விழா பிப்ரவரி 26 முதல் மார்ச் 1 வரை நான்கு நாட்கள் நடைபெற உள்ளன.

ரிவேரா 2026இல் விளையாட்டுகளைத் தவிர்த்து 136 முதன்மை நிகழ்வுகளும் 16 பிரீமியம் நிகழ்வுகளும் இடம்பெற்றுள்ளன. மொத்தம் 18,000க்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்கள் கலந்துகொள்கின்றனர். அதில் 1,000க்கும் மேற்பட்ட வெளி கல்லூரி மாணவர்கள் உள்ளனர்.

28 வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்த 120க்கும் மேற்பட்ட வெளிநாட்டு மாணவர்கள் INFUSION என்ற பல கலாச்சார அதிசய



நிகழ்வில் பங்கேற்கின்றனர். இத்தாலியிலிருந்து 33 மாணவர்களும் அவர்களுடைய 2 பேராசிரியர்களும் விழாவில் கலந்துகொள்ள VIT வளாகத்திற்கு வந்துள்ளனர். மொத்த பணப் பரிசு மதிப்பு ரூ. 25 லட்சத்துக்கும் மேல் உள்ளது. ப்ரீரிவேரா நிகழ்வுகள்:ப்ரீரிவேரா கட்டத்தில் 20க்கும் மேற்பட்ட நிகழ்வுகள் நடத்தப்பட்டன. இதில் 3 பிரீமியம் ப்ரீரிவேரா நிகழ்வுகளும் விளையாட்டு நிகழ்வுகளும் அடங்கும். ரிவேரா விளையாட்டு நிகழ்வுகள் ப்ரீரிவேரா மற்றும் முதன்மை கட்டங்களில் இரண்டிலும் நடைபெறுகின்றன.

ப்ரீரிவேரா விளையாட்டுகள் பிப்ரவரி 3 முதல் 13 வரை நடைபெற்றன. முதன்மை ரிவேரா விளையாட்டுகள் பிப்ரவரி 16 முதல் 27 வரை தொடரும். 14 ப்ரீரிவேரா விளையாட்டு நிகழ்வுகளும் 12 முதன்மை விளையாட்டு நிகழ்வுகளும் உள்ளன. விழா பிப்ரவரி 26 அன்று மாரத்தான் போட்டியுடன் தொடங்குகிறது. இந்த ஆண்டு புதிதாக பிப்ரவரி 19 அன்று சிறப்புக் குழந்தைகள் விளையாட்டு நிகழ்வு அறிமுகப்படுத்தப்பட்டது.

ரிவேரா நிகழ்வுகள்:

முதன்மை ரிவேரா நிகழ்வுகள் பிப்ரவரி 26 முதல் மார்ச் 1 வரை நடைபெறும். இதில் 100க்கும் மேற்பட்ட முதன்மை ரிவேரா நிகழ்வுகளும் 20க்கும் மேற்பட்ட பிரீமியம் நிகழ்வுகளும் இடம்பெறும். 60க்கும் மேற்பட்ட கிளப்கள், சாப்டர்கள் மற்றும் சங்கங்கள் இந்த விழாவில் பங்கேற்கின்றன.

இந்த ஆண்டு சிறப்பம்சமாக ரிவேரா 2026 Grid Wars நிகழ்வின் மூலம் AI vs Humans போட்டி வடிவத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. Pickle Royale: Lights Out மூலம் ஒளிரும் வடிவ விளையாட்டுகள் அறிமுகமாகியுள்ளன. SDG இலக்குகளுடன் இணைந்த நிலைத்தன்மை சார்ந்த ஃபேஷன் போட்டிகள் இணைக்கப்பட்டுள்ளன. Diamond, Gold, Silver வகைகளைக் கொண்ட டயர்டு Proshow Pass முறை புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

நிகழ்வுகளில் தனி, குழு மற்றும் போட்டி முறையிலான இசை மற்றும் நடனப் போட்டிகள், சங்கங்கள் வழியாக இலக்கிய மற்றும் விவாதப் போட்டிகள், Esportஃ மற்றும் விளையாட்டு போட்டிகள், நிலைத்தன்மை தீம்களுடன் ஃபேஷன் மற்றும் டிசைன் போட்டிகள், VIT Film Societஹ்யால் நடத்தப்படும் CLIFF - Celluloid Indie Film Festival என்ற குறும்படப் போட்டி (மாணவர் திரைப்படத் தயாரிப்பாளர்களுக்கு தளம் வழங்குகிறது), பல்வேறு வகைகளில் நுண்கலை மற்றும் கைவினை பயிலரங்குகள் ஆகியவை இடம்பெற்றுள்ளன.

முதன்மை கலை நிகழ்வுகள்:

ப்ரோஷோக்களில் மிதாலி ராஜ், முன்னாள் இந்திய பெண்கள் கிரிக்கெட் அணியின் வீராங்கனை, ரிவேரா '26இன் தொடக்க விழா விருந்தினராக பங்கேற்கிறார்.

பிப்ரவரி 26 (நாள் 1) அன்று பிரபல பின்னணி பாடகி சுனிதி சவுஹான் இசை நிகழ்ச்சி இரவு 8 மணிக்கு நடைபெறும். பிப்ரவரி 27 (நாள் 2) அன்று இசையமைப்பாளர் எஸ்.தமன் இசை நிகழ்ச்சி இரவு 8.15 மணிக்கு நடைபெறும்.

பிப்ரவரி 28 (நாள் 3) அன்று பின்னணி பாடகர் பென்னி தயாள் இசை நிகழ்ச்சி இரவு 8.30 மணிக்கும், பாடகர் பிரதீப் குமார் இசை நிகழ்ச்சி மாலை 6.45 மணிக்கும் நடைபெறும். மார்ச் 1 (நாள் 4) அன்று நிறைவு விழாவில் நடிகை ஜெனிலியா தேஷ்முக் பங்கேற்கிறார். இந்நிகழ்ச்சி மாலை 6.45 மணிக்கு நடைபெறும். தொடர்ந்து டிஜே ஷான் அவர்களின் டிஜே இசை நிகழ்வு இரவு 8 மணிக்கும், ரித்விஷ் ஆகியோரின் இசை நிகழ்வு இரவு 9.15 மணிக்கும் நடைபெற உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

பேட்டியின்போது விஐடி துணை தலைவர்கள் சங்கர் விசுவநாதன், சேகர் விசுவநாதன், செயல் இயக்குநர் சந்தியா பென்டாரெட்டி, ரமணி பாலசுந்தரம், உதவி துணை தலைவர் காதம்பரி எஸ்.விசுவநாதன், இணை துணைவேந்தர் பார்த்தசாரதி மல்லிக், பதிவாளர் ஜெயபாரதி, ரிவேரா ஒருங்கிணைப்பாளர் பெல்வின் எட்வர்ட் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

# தஞ்சாவூர் மாவட்டத்தில் 19. 51 லட்சம் வாக்காளர்கள் இறுதி வாக்காளர் பட்டியலில் மாவட்ட கலெக்டர் வெளியிட்டார்1.47 லட்சம் வாக்காளர்கள் நீக்கம்

தஞ்சாவூர் பிப்.25-

தஞ்சாவூர் மாவட்டத்தில் இறுதி வாக்காளர் பட்டியலை அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் மாவட்ட கலெக்டர் பிரியங்கா பங்கஜம் வெளியிட்டார்

அதன்படி தஞ்சாவூர் மாவட்டத் தில் மொத்தம் 19. 51 லட்சம் வாக்கா ளர்கள் உள்ளனர். 1.47 லட்சம் வாக்காளர்கள் நீக்கம் செய்யப் பட்டுள்ளனர்.

தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்த இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப் பட்டது .இதனை மாவட்ட தேர்தல் அலுவலரும், கலெக்டருமான பிரியங்கா பங்கஜம் அரசியல் கட்சி பிரதி நிதிகள் முன்னிலையில் வெளி யிட்டார் .பின்னர் கலெக்டர் பிரியங்கா பங்கஜம் செய்தியாளர் களிடம் கூறியதாவது:

தேர்தல் ஆணையத்தின் உத்தரவு ப்படி தஞ்சாவூர் மாவட்டத்தில் இறுதி வாக்காளர் பட்டியல் வெளி யிடப்பட்டுள்ளது .வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தத்துக்கு முன்பு தஞ்சாவூர் மாவட்டத்தில் 20 லட்சத்து 98 ஆயிரத்து 561 வாக்காள ர்கள் இருந்தனர்.

கடந்த டிசம்பர் மாதம் 19ஆம் தேதி வெளியிடப்பட்ட விரைவு வாக்காள ர் பட்டியலின்படி 8 சட்டசபை தொகுதிகளிலும் 9,




இலட்சத்து19 ஆயிரத்து 973 ஆண்கள் வாக்காள ர்கள், 9, இலட்சத்து 71ஆயிரத்து 935பெண் வாக்காளர்கள், 150 மூன்றாம் பாலினத்தவர்கள் உட்பட மொத்தம் 18 லட்சத்து 92 ஆயிரத்து 058வாக்காளர்கள் இடம்பெற்றிருந் தனர் 2, இலட்த்து6 ஆயிரத்து502 பேர் நீக்கம் செய்யப்பட்டு இருந்தனர்.

இறந்த மற்றும் இரட்டை பதிவு என கருதப்பட்டு வாக்காளர் பட்டியலில் இருந்து பெயர் நீக்கம் செய்யப்பட்ட வாக்காளர்கள் தங்களது பெயரை மீண்டும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கும் வகையில் இந்திய தேர்தல் ஆணையத்தால் பரிந்துரைக்கப்பட்ட 13 ஆவணங்களில் ஏதேனும் ஒன்றை இணைத்து விண்ணப்பிக்க அறிவிக்கப்பட்டது .அதன்படி மனுக்கள் பெறப்பட்டு விசாரணை நடத்தியதின் அடிப்படையில் 29 ஆயிரத்து 329 ஆண் வாகாளர்கள், 35 ஆயிரத்து 236 பெண் வாக்காளர்கள், 8 மூன்றாம் பாலினத்தவர்கள் உட்பட 64 ஆயிரத்து573 வாக்காளர்களின் பெயர்கள் சேர்க்கப்பட்டும், 5186 வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டும் உள்ளது.

அதன்படி இறுதி வாக்காளர் பட்டியலின்படி தஞ்சாவூர் மாவட்டத்தில் ஆண் வாக்காளர்கள் 9 லட்சத்து 47 ஆயிரத்து 278பேரும்,பெண் வாக்காளர்கள் 10 லட்சத்து 4 ஆயிர த்து 12 பேரும், மூன்றாம் பாலினத் தவர் 155 பேரும் என மொத்தம் 19 லட்சத்து 51 ஆயிரத்து 445 வாக்காள ர்கள் உள்ளனர் .வாக்காளர் பட்டிய ல் சிறப்பு தீவிர திருத்த பணி மூலம் 1லட்சத்து 47 ஆயிரத்து 116 வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளனர். தஞ்சாவூர் மாவட்டத்தில் முன்பு 2 ஆயிரத்து311 வாக்கு சாவடிகள் இருந்தன. தற்போது 185 வாக்கு சாவடிகள் அதிகரிக்கப்பட்டு மொத்தம் 2 ஆயிரத்து496 வாக்கு சாவடிகள் உள்ளன

இறுதி வாக்காளர் பட்டியல் அனைத்து தாசில்தார் அலுவலகங்களில் வாக்காளர்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது .புதிதாக வாக்காளர் பட்டியலில் சேர்ந்த வாக்காளர்களுக்கு வாக்காளர் அடையாள அட்டை கட்டணம் இன்றி விரைவு தபால் மூலம் அனுப்பப் பட்டு வருகிறது.

இவ்வாறு அவர் கூறினார்

இதில் மாவட்ட வருவாய் அதிகாரி தியாகராஜன் ,உதவி கலெக்டர்கள் ஹிருத்யா விஜயன், கார்த்திக் ராஜா ,தஞ்சாவூர் வருவாய் கோட்டாட்சியர் நித்யா மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.